# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் சென்னை பள்ளிகளுக்கு இலவசமாக மண்புழு உரங்களை வழங்கினார்.

மாண்புமிகு திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் ராஜ்பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னையில் உள்ள அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், மற்றும் தனியார் பள்ளியை சேர்ந்த 70 பள்ளிகளின் மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பள்ளி தலைமையாசிரியர்களுக்கு ஆளுநர் மாளிகையில் தயாரிக்கப்பட்ட மண்புழு உரங்களை இலவசமாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஆளுநர் அவர்கள் பேசும்போது, மண்புழு உரத்தின் முக்கியத்துவத்தையும் அது தயாரிக்கும் முறையையும் முதல்வர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்துவதின் மூலமாக நீங்கள் பள்ளிகளுக்கு சென்று மண்புழு உரத்தின் அவசியம் குறித்து மாணவ மாணவிகளுக்கு தெரியப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நான் இளமையில் கற்ற அனைத்தும் நினைவில் உள்ளது. அதேபோல், மாணவ மாணவிகளுக்கு மண்புழு தயாரிக்கும் முறையினை தெரியப்படுத்துவதால், சிறுவயதிலேயே நன்கு தெரிந்துக் கொள்வார்கள் இதை மறக்க மாட்டார்கள் என்றார்.

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் மரம் மற்றும் செடிகளை வளர்த்து மண், நீர் மற்றும் காற்று மாசுபடாமல் தடுக்க வேண்டும். இயற்கையான முறையில் சாகுபடி செய்யப்படும் பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்களை உண்பதினால் நோயில்லாமல் ஆரோக்கியமாக வாழ முடியும். தாவரங்களின் இலை தழைகள் மற்றும் இதர பண்ணைக் கழிவுகளை மண்ணில் இட்டு சிறிதளவு மக்கச்செய்து அவற்றுடன் ஆடு, மாடுகளின் சாணக்கழிவுகளை கலந்து நிழற்பாங்கான பகுதிகளில் வைத்து மண்புழுக்களை விடுவதினால் நமக்கு நல்ல மண்புழு உரம் கிடைக்கிறது.

மண்புழு உரத்தினை நிலத்திற்கு இடுவதினால் மண்ணில் உள்ள ரசாயனத்தின் அளவு குறைக்கப்பட்டு, மண்ணின் உயிர் தன்மை மேம்படுகிறது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் அளவு அதிகரிக்கிறது. மண்புழு உரம் மண்ணின் கடின தன்மையை குறைத்து செடிகளின்

வேர்கள் நன்கு வளர்வதற்கான காற்றோட்டம், நீர்பிடிதன்மை, இயற்கை அங்கக தன்மை போன்றவற்றை மேம்படுகிறது. மண்புழு உரத்தில் இயற்கையாகவே உள்ள ஊட்டச்சத்துக்கள் தாவர வளர்ச்சியை மேம்படுத்துகிறது என்றார்.

மண்புழு உரம் தழைச்சத்தை மண்ணில் நிலை நிறுத்தும் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களான அசடோபாக்டர் மற்றும் அசோஸ்பைரில்லம் போன்றவையும் மண்ணில் கரையாத நிலையிலுள்ள மணிச்சத்தை கரைத்து பயிர்களுக்குக் கிடைக்கும் வகையில் செய்யும் பாஸ்போபேக்டிரியா போன்ற நுண்ணுயிர்களையும் கொண்டுள்ளது. மண்புழு உரத்தில் பயிர் வளர்ச்சி ஊக்கிகளான அமினோ அமிலங்கள், ஆக்சின் மற்றும் ஜிப்ரலின் போன்றவை அதிகமாக உள்ளதால் பயிர்கள் நன்கு செழித்து வளர்வதுடன் விளைச்சலும் அதிகரிக்கும். ரசாயன இடுபொருட்களின் பயன்பாட்டை குறைத்து, மண்புழு உரங்களை பயன்படுத்தி இயற்கை வழியில் உணவு உற்பத்தி செய்து நமது தேக ஆரோக்கியம் மற்றும் சந்ததிகளைக் காப்போம்.

வீடுகளில் சேரும் மக்கும் குப்பைகளை பயன்படுத்தி அவரவர் வீடுகளில் இயற்கை உரங்களை பெற்று இயற்கை வழியில் காய்கறிகளை உற்பத்தி செய்து, பயன்பெற வேண்டும் என்று இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைவரையும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், திருமதி. மகேஸ்வரி ரவிகுமார், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி) மற்றும் உயர் அதிகாரிகள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

---

ராஜ்பவன், சென்னை–22 ஒம்/–

நாள் : 12.07.2018 இணை இயக்குநர் (ம.தொ)